**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No. 94/2013**

2025ம் ஆண்டு ஜீலைத் திங்கள் 19 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சந்திரன் | தாலுகா | : |
| த/ பெயர் | : | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | தொழில் | : |

**<u>வா.சா. 1</u>**

நாள் : 19.07.2025

நேரம் : 10.59.AM

## <u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் 5ம் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

1)கடந்த 7.5.1910ம் தேதி தாவா சொத்துள்ளிட்ட மொத்தச்சொத்தை கருப்பாயி, பெருமாள் முக்கந்தன் வகையறாவிடம் எழுதிப்பெற்ற பதிவு கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1**

2)ஷை கிரையப்பத்திரத்தில் கண்ட எழுத்துக்கள் தெளிவாக தெரிவதற்காக முதுகுளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வாதிகள் பெற்ற கிரையப்பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.2**

3)தாவாச்சொத்துள்ளிட்ட மொத்தச்சொத்திற்கு விஸ்தீரணத்தை குறைத்து வாதிகள் மற்றும் அவர்களது தாயார் ஆகியோர்கள் பெயரில் நத்தம் நிலவரித்திட்டத்தில் உட்பிரிவு

செய்து வழங்கிய கூட்டுப்பட்டா அசல் **வா.சா.ஆ.3**

4)கடந்த 16.3.2012 ம் தேதி 1 ம் பிரதிவாதி தாவாச்சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவு அசல் **வா.சா.ஆ.4**

5)கடந்த 2.7.2013 ம் தேதி வாதிகள் தாவாச்சொத்துள்ளிட்ட மொத்தச்சொத்தை கிரையப்பத்திரப்படி அளந்து கொடுக்கச்சொல்லி முதுகுளத்தூர் வட்டாட்சியருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிய மனு மற்றும் ஒப்புகை அட்டை, அஞ்சல ரசீதுடன் கூடிய கோர்வை அசல் **வா.சா.ஆ.5**

6)கடந்த 30.8.2013 ம் தேதி ஷை மனுவிற்கு முதுகுளத்தூர் வட்டாட்சியர் வாதிகளை கிரையப்பத்திரப்படி எல்லைக்கற்களை ஊன்றச்சொல்லி அனுப்பிய குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.6**

(வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.08.AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.19 13:15:43 +0530